'' கண்ணைக் காப்பது இமை ''
'' மண்ணைக் காப்பது மழை ''

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2013-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" தீயினால் சுட்டபுண் உள்ஆறும், ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு"**

**பொருள் :** **நெருப்பினால் உண்டான புண், உடலில் தழும்பாகத் தெரிந்தாலும் உள்ளே ஆறிவிடும்; ஆனால், தீய சொற்களால் உள்ளத்தில் உண்டான தழும்பு, எப்போதும் ஆறாது.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>மநி2/26575/2013</u>**

மதுரை மாநகராட்சியில் கண்காணிப்பாளர் பணியிடத்திலிருந்து பணி உயர்வு பெறும் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009-ன் படி ஏற்கனவே பெற்று வரும் ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.4900 ஊதிய விகிதத்திற்கு பதிலாக 12.12.2007 முதல் திருத்திய ஊதிய விகிதம் ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.5100/- திருத்தி தர ஊதியம் வழங்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு நிதித் (ஊதியக்குழு) துறையின் 22.07.2013-ந் தேதிய 244- எண் அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு:

1. திருத்திய தர ஊதியம் 12.12.2007 முதல் ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.5100/- என கருத்தியலாக நிர்ணயம் செய்தும் 01.04.2013 முதல் பணப்பயன் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட திருத்திய ஊதிய விகிதம் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பொருந்தும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.459</u>**

**<u>குறிப்பு பதிவு செய்யப்பட்டது.</u>**

**2) மநி 2/26577/2013**

மதுரை மாநகராட்சியில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009-ன் படி ஏற்கனவே பெற்று வரும் ஊதிய விகிதத்திற்கு பதிலாக 12.12.2007 முதல் திருத்திய ஊதிய விகிதம் ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.4,800/- வழங்க வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு நிதித் (ஊதியக்குழு) துறையின் 22.07.2013-ந் தேதிய 296- எண் அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு: திருத்திய ஊதிய விகிதம் 12.12.2007 முதல் ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.4,800/- என கருத்தியலாக நிர்ணயம் செய்தும் 01.04.2013 முதல் பணப்பயன் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.460**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**3) மநி 2/26573/2013**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு 10 வருடம் மற்றும் 20 வருடம் முடித்த தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பெறும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு திருத்தி ஊதிய விதிகள் 2009-ன் படி ஏற்கனவே அடிப்படை ஊதியத்தில் 3% சதவீதம் ஊதிய உயர்வு வழங்கி வந்ததற்கு தற்போது கூடுதலாக ஒரு 3% சதவீதம் ஊதிய உயர்வு வழங்க வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு நிதித் (ஊதியக்குழு) துறையின் 22.07.2013-ந் தேதிய 237- எண். அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

குறிப்பு: ஒரு ஊதிய உயர்வு 3% சதவீதம் 01.01.2006 முதல் கருத்தியலாக நிர்ணயம் செய்தும் 01.04.2013. முதல் பணப்பயன் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.461**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**4) மநி 10/26574/2013**

அரசின் அனைத்து துறைகளிலும் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களின் குறையை ஈடு செய்யும் விதமாக அனைத்து துறைகளிலும் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள், டபேதார்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள், மருத்துவமனைகளில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் சிறப்பு ஈட்டுப்படியாக சாதாரண நிலையில் உள்ளோருக்கு மாதம் ரூ.50/- வீதமும், தேர்வு நிலையில் உள்ளோருக்கு மாதம் ரூ.75/- வீதமும் மற்றும் சிறப்பு நிலையில் உள்ளோருக்கு மாதம் ரூ.100/- வீதமும் 01.04.2013 முதல் பயன் பெறும் வகையில் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ள அரசின் நிதி(ஊதியக்குழு) துறை அரசாணை எண்.239 நாள்.22.07.2013-ஐ மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.462**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**5) மநி 10/26578/2013**

நகராட்சி நிர்வாக துறையின் கீழுள்ள நகர்ப்புற சுகாதார செவிலியர்கள், உதவிப் பொறியாளர்கள், நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும் பல தொழிநுட்ப பணியிடங்களுக்கு 01.01.2006 முதல் திருத்திய ஊதிய விகிதங்கள் கருத்தியலாக நிர்ணயம் செய்தும் 01.04.2013 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணையிடப்பட்டுள்ள அரசின் நிதி(சம்பளக்குழு) துறை அரசாணை எண்.297 நாள்.22.07.2013-ஐ மான்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.463**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**6) மதி 2/26716/2013**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 47, சர்வே வார்டு X பிளாக் எண்.22, நகரபுல எண்.93 இடம் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடம் ஆகும். மேற்கண்ட இடம் அழகர்கோவில் ரோடும், பாரதி உலா ரோடும் சந்திக்கும் இடத்தில் அமைகிறது. இப்பூங்காவிற்கு வடபுறம் நகரபுல எண்.94-ல் 1218 ச.மீ இடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடம் உள்ளது. இவ்விடத்தில் இடிந்த நிலையில் இரண்டு வீடுகள் உள்ளன. மேற்படி இடத்தின் கீழ்புறம் அழகர் கோவில் சாலையையொட்டி மாநகராட்சி கழிப்பறையும் உள்ளது. தற்பேது மேற்கண்ட இடம் காலியாக உள்ளதால் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்பு உள்ளது. எனவே, இவ்விடத்தை மாநகராட்சியின் எதிர்கால அபிவிருத்திக்காகவும் மற்றும் மாநகராட்சி பூங்காவினை மாநகராட்சி மூலம் அபிவிருத்தி செய்யவும் இலவசமாக மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய தமிழ்நாடு வீட்டு வசதி

வாரியத்தினரை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் கருத்துருவை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.464**

**பொருளில் கண்டுள்ள இடத்தினை மதுரை மாநகராட்சிக்கு இலவசமாக வழங்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினை கோர தீர்மானிக்கிறது.**

**7) RR1/27378/13**

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்டச் சுற்றுச்சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண்: 225, நாள் : 09.06.2000 மற்றும் அரசாணை எண்:149, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 23.10.2000-ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை வழிகாட்டுதல் படி ஒவ்வொரு ஆண்டும் 8% உயர்வு செய்து மாநகராட்சி மாமன்ற அனுமதியுடன் சுங்க கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

அதனடிப்படையில் **01.11.2011** முதல் **31.10.2012** முடிய உள்வட்டச் சுற்றுச் சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வசூல் செய்து வரும் கட்டணத்தில் 8% உயர்வு செய்து வசூல் செய்ததற்கு மாமன்ற தீர்மானம் எண்**.37**, நாள். **29.08.2011** ன் படி பின்னேற்பு செய்தும் மற்றும் 01.11.2012 முதல் 31.10.2013 முடிய உள்வட்டச் சுற்றுச் சாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்து வரும் கட்டணத்தில் 8% உயர்வு செய்து வசூல் செய்வதற்கு மாமன்ற தீர்மானம் எண்.269 நாள்.31.10.2012ன்படி அனுமதியும் வழங்கி ஆணை வெளியிட்டுள்ள அரசாணை எண்.119 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.08.2013ஐ மாமன்ற தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.465**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**8) ம.பொ.5/Est. 2873/12-13**

மதுரை மாநகராட்சி மண்டலம் **4** வார்டு எண்**.78**ல் உள்ள திடீர் நகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை மெயின் அமைக்கும் வேலைக்கு ரூ.60,00,000/-க்கு (ரூபாய் அறுபது லட்சம்) மதிப்பீடு தயார் செய்து பொறியாளரின் தொழில்நுட்ப ஒப்புதலுக்கும், ஆணையாளரின் நிர்வாக ஒப்புதல் பெற்றும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்றும், பெற்று 'E' டெண்டர் முறையில் டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு டெண்டர்கள் பெறப்பட்டது. மேற்கண்ட டெண்டர்களில் திரு.S.இராமநாதன். மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக டெண்டர் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கவும், மேற்கண்ட மதிப்பீட்டிற்கு முன்ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.466**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**9) CW1/ 27633/2013**

மதுரை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிற மாநில மாநகராட்சிகளில் கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதி, பாதாளச்சாக்கடை திட்டம், சாலை வசதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற திட்டங்களை பார்வையிட்டு அறிந்து வர மாமன்ற உறுப்பினர்களை இரண்டு பிரிவாக பிரித்து ஒரு பிரிவினரை அகமதாபாத் மாநகராட்சிக்கும், மற்றொரு பிரிவினரை மும்பை மாநகராட்சிக்கும் சென்று வர அரசின் ஒப்புதலை பெற கடிதம் அனுப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.467**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) CW1/ 27632/2013**

புதுடெல்லியில் 26.08.2013 மற்றும் 27.08.2013ந்தேதி நடைபெறவுள்ள "Innovations in Urban Governance" என்ற கருத்தரங்கில் மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களும் கலந்துகொள்ள வேண்டி வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தேர்தல் G.O.(Rt) No,139 நாள் 23.08.2013 அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.468**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை நகராட்சி**

**மதுரை**
**நாள் : 23.08.2013**

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

# Table Agenda - நாள் : 04.09.2013

**1) ம.பொ4/ம.எண்.560/13-14**

அரசு அலுவலகக் கட்டிடங்களில் மின்பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் அறிமுகம் செய்துள்ள **Solar Energy Policy 2012** திட்டத்தினை நடைமுறைப்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக கடித எண்.ROC No:47965/E1/2013 நாள்: **17.06.2013–ல்** தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே இத்திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி மைய அலுவலகம் அறிஞர் அண்ணா மாளிகை கட்டிடத்தில் சோலார் மின்சக்தியை பயன்பாட்டிற்கு நடைமுறைப்படுத்திட தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி மையம் வழிகாட்டுதலின்படி ரூ.**55.83** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகரப்பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலும் ஆணையாளர்அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் **அம்மா** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்திடவும், மைய அலுவலக அண்ணாமாளிகை கட்டிடத்தில் மின்துய்ப்புக் கட்டணத்தை குறைத்திடும் நோக்கத்தில் தயார் செய்யப்பட்ட வேலைக்கான மதிப்பீடுத்தொகை ரூ.**55.83** லட்சத்திற்கு பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.469**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) Jns.4/28631/2007**

மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவையினை வைகை அணையிலிருந்து குழாய் மூலம் பெறப்படும் குடிநீர்திட்டங்களின் மூலமும், வைகை ஆற்றுப்படுகையினை நீராதாரமாக கொண்ட குடிநீர் திட்டங்களின் மூலமும் மற்றும் உள்ளூர் நீராதாரங்களின் மூலமும் பெறப்பட்டு சமாளிக்கப்பட்டு வருகிறது. இதில் பழைய மதுரை மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்காக தமிழக அரசு வருடம் ஒன்றிற்கு 1500 மில்லியன் கன அடி நீர் வைகை அணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை **1100 mm** விட்டமுள்ள குழாய்களின் மூலம் பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்திற்கு **68** மில்லியன் லிட்டர் மற்றும் 47 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப்பெறுமாறு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் ஒரு நாள் விட்டு ஒருநாள் வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு வைகை ஆற்றுப் படுகையில் அமைக்கப்பட்ட திட்டங்களின் மூலமும் மற்றும் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் கிடைக்கப்பெற உள்ளது. இது தவிர கூடுதல் தேவைக்கு தனியாக காவேரி ஆற்றுப்படுகையை நீராதாரமாக கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளது.

பழைய மதுரை மாநகராட்சி பகுதிகளுக்கு தற்போதுள்ள மக்கள் தொகைக்கு குடிநீர் தேவை **164** மில்லியன் லிட்டரும், எதிர்கால தேவைக்கு **298** மில்லியன் லிட்டரும் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் ஏற்கனவே உள்ள முதல் மற்றும் இரண்டாம் வைகை குடிநீர் திட்டத்தின் மூலம் நாள்தோறும் **115** மில்லியன் லிட்டர் குடிநீரும் மற்றும் வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டங்களை புணரமைப்பு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் **23** மில்லியன் லிட்டர் ஆகியவற்றை கணக்கில் கொண்டு தற்போதைய பழைய மாநகராட்சியின் குடிநீர் தேவையினை சமாளிப்பதற்கே வருடம் ஒன்றிற்கு 590 மில்லியன் கன அடி நீர் கூடுதலாக தேவைப்படும் நிலை உள்ளது. தற்போது, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள **1100mm** விட்டமுள்ள இயல்பு நீர் குழாய்களின் மூலம் மேற்கண்ட கூடுதலான **590** மில்லியன் கன அடி நீரை பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வரை எடுக்கும் நிலை உள்ளது. இதனை பயன்படுத்தி வைகை அணையிலிருந்து எடுக்கப்படும் கூடுதலான நீரை பண்ணைப்பட்டியில் புதிய நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தனியே குழாய் மூலம் கொண்டு வரும் திட்டம் செயல்படுத்த இயலும். எனவே, தற்போதுள்ள குடிநீர் பற்றாக்குறையினை போக்குவதற்கு வைகை அணையிலிருந்து கூடுதலாக வருடம் ஒன்றிக்கு 600

மில்லியன் கன அடி நீரை சிறப்பு ஒதுக்கீடாக மதுரை மாநகராட்சிக்கு பெற்றிட அரசின்அனுமதி வேண்டி பிரேரனை அரசுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.470**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ந.பொ.1 / 17333 / 12**

மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் நகரின் மையப் பகுதியில் வெளியூர் செல்லும் பேருந்துகள் வந்து செல்வதால் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டும் நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் கீழ் நிதி மானியம் பெற்று உயர்மட்ட பாலங்கள் மற்றும் தனியார் பேருந்துகள் நிறுத்துமிடம் அமைக்க திட்டமிடப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தனியார் திட்ட ஆலோசகர் மூலம் தயார் செய்து அனுப்பி வைக்குமாறு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் தனியார் திட்ட ஆலோசகர் மூலம் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | சிம்மக்கல் முதல் கோரிப்பாளையம் வரை வைகை ஆற்றினை ஒட்டி செல்லும் தரைமட்டப் பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைத்தல் | 12.40 |
| 2 | அருள்தாஸ்புரம் (ESI மருத்துவமனை) முதல் ஆரப்பாளையம் வரை வைகை ஆற்றினை ஒட்டி செல்லும் தரைமட்டப் பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைத்தல் | 18.00 |
| 3 | மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் அருகில் உள்ள ஆம்னி பேருந்து நிலையத்தினை அபிவிருத்தி செய்தல் | 22.53 |
| **மொத்தம்** | | **52.93** |

மேற்கண்ட திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு, இத்திட்டம் குறித்த விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான **ரூ.52.93** கோடியினை நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் மூலம் Infrastructure and Aminities Development Fund**-ன்** கீழ் மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.471**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) E3/6912/13**

மதுரை மாநகராட்சி முனிச்சாலை மகப்பேறு மருத்துவமனையில் பகுதி சுகாதார செவிலியராக பணிபுரிந்து வரும் திருமதி.K.கற்பகசாந்தி, அவரது குடும்ப சூழ்நிலை கருதி சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** இப்பணிமாறுதலுக்கு பயணப்படி வழங்கப்படமாட்டாது.

**மாமன்றத்தீர்மானம் எண்.472**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) மவ3/028877/13**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள யானைக்கல், சிம்மக்கல் வடக்கு மாசி வீதி, வடக்கு மாரட் வீதி ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் பழக்கடைகளை மாட்டுத்தாவணி மத்திய காய்கறி அங்காடி அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலியாக உள்ள இடத்தில் இடமாற்றம் செய்ய மதுரை பழக்கமிஷன் வணிகர் சங்கம் மற்றும் சிம்மக்கல் பழக்கடை மொத்த வியாபாரி சங்கத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். மதுரை மாநகர போக்குவரத்து நெரிசலைக்கருத்தில் கொண்டு மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டுக்கு வடக்கிலும், விறகுமண்டிக்கு கிழக்கிலும்,

அண்ணாநகர் சாலைக்கு மேற்கிலும், மேலூர் சாலைக்கு தெற்கிலும் அமைந்துள்ள காலி இடத்தில் கடைகள் கட்டி ஒதுக்கீடு செய்ய மாமன்ற தீர்மானம் எண்:378 நாள்:17.05.2013 ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை பழக்கமிஷன் வணிகர் சங்கம் மற்றும் சிம்மக்கல் பழக்கடைகள் மொத்த வியாபாரிகள் சங்கத்தின் கோரிக்கையின் படி 600 முதல் 700 சதுர அடி அளவுள்ள 75 கடைகளும், 250 முதல் 300 சதுர அடி அளவுள்ள 150 கடைகள் கட்டவும் 600 முதல் 700 சதுர அடி அளவுள்ள கடைகளுக்கு முன்பணம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) 250 முதல் 300 சதுர அடி அளவுள்ள கடைகளுக்கு முன்பணம் ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யவும், மாத வாடகை பொது பணித்துறையினரால் சதுர அடி மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்து மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும், பெரிய கடைகளுக்கு ரூ.2 லட்சமும், சிறிய கடைகளுக்கு ரூ.1 லட்சமும் செலுத்தி முன்னுரிமை பெற்றுக் கொள்ள வேண்டியது.

மாநகராட்சி சார்பாக இந்த இடத்திற்கு கழிவுநீர் வசதி, சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் தெருவிளக்கு வசதி முதலியவைகளை மாநகராட்சி சார்பாக செய்து கொடுக்கவும் மேற்படி கடைகள் கட்டுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.473**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) NE1/07856/2013**

மதுரை மாநகராட்சி, வார்டு எண்.**27** மற்றும் வார்டு எண்.**25,48** மற்றும் **26** ஆகிய பகுதிகளில் புது நத்தம் ரோடு மற்றும் அழகர் கோவில் சாலையினை இணைத்து அய்யர் பங்களாவிலிருந்து மூன்று மாவடி சாலை மற்றும் திருப்பாலை பகிர்மானக் கால்வாய் செல்கிறது.

இச்சாலையின் வடபுறம் மற்றும் மையத்தில் திருப்பாலை பகிர்மான (பெரியாறு) கால்வாய் செல்கின்றது. தற்போது இக்கால்வாயில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட **95** வீடுகள் சென்னை உயர்நீதிமன்றம், மதுரைகிளை உத்தரவின்படி பொதுப்பணித்துறையினரால் அகற்றப்பட்டது. இக்கால்வாயிலிருந்து பாசனத்திற்காக முன்பு தண்ணீர் திறந்து விடப்பட்டு பாசனம் நடைபெற்றது. தற்போது இக்கால்வாயின் ஆயக்கட்டு பகுதிகள் அனைத்தும் வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டு விவசாய நிலங்கள் இல்லாமல் குடியிருப்பு பகுதிகளாக அபிவிருத்தி அடைந்துள்ளது.

மேலும் இக்கால்வாயில் கழிவுநீர் வெளியேற்றத்தினால் சுகாதார கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. இப்பகுதி நகர்ப்புறமானதினால் சாலைப் போக்குவரத்து மிகுதியாக உள்ளது. இச்சாலையினை விரிவுபடுத்தினால் புது நத்தம் சாலை மற்றும் அழகர் கோவில் சாலைகள் இரண்டையும் இணைக்கும் இணைப்பு சாலையாக மாற்றி வாகனங்கள் நகருக்குள் வராமல் நகருக்கு வெளியே செல்ல இயலும் அதனால் நகரின் மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறையும். மேலும், இப்பகுதியில் உள்ள சாலைகளில் போக்குவரத்து தடை ஏற்பட்டால் இச்சாலையினை மாற்று சாலையாகவும் பயன்படுத்தலாம்.

தற்போது இக்கால்வாயில் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் பாதுகாக்க கால்வாயின் மையப் பகுதியில் கான்கிரீட் மூடியுடன் வாய்க்கால் அமைத்து இருபுறமும் சாலையாக பயன்படுத்தினால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

இக்கால்வாய் நகரளவு எண். 19/2 to 22/2 பரசுராம்பட்டி கிராமம் மற்றும் 42/2 to 7,54/2,356/2,3,56/4,94/2 கண்ணனேந்தல் கிராமம் ஆகிய புல எண்களில் மேற்படி கால்வாய் அமைந்துள்ளது.

எனவே, திருப்பாலை பகிர்மான கால்வாய் இடத்தின் மையத்தில் கான்கிரீட் மூடியுடன் கூடிய கால்வாய் அமைத்து இருபுறம் உள்ள சாலையை முழுமையாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உரிய அனுமதி வழங்க பொதுப்பணித்துறையை கேட்டுக் கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.474**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) H6/26384/13**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர மற்றும் தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறுவதற்கு தேவையான மருந்துகள் மற்றும் பரிசோதனைக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய

தேவைப்படும் தொகை **ரூ.5,00,000/-ஐ** (ரூபாய் ஐந்து இலட்சம்) பொது நதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.475**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) H3/028765/2013**

மதுரை மாநகராட்சியின் மையப் பகுதிகளாக கருதப்படுகின்ற கீழ்க்கண்ட பகுதிகளில் இரவு நேரங்களில் சிறப்பு துப்புரவு பணி மேற்கொள்ள மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| | | |
|---|---|---|
| 1. | நான்கு சித்திரை வீதிகள் | 8 ஊழியர்கள் |
| 2 | நான்கு மாசி வீதிகள் | 8 ஊழியர்கள் |
| 3. | நேதாஜி ரோடு | 3 ஊழியர்கள் |
| 4. | டவுன்ஹால் ரோடு | 3 ஊழியர்கள் |
| 5. | மேல வடம்போக்கி தெரு | 2 ஊழியர்கள் |
| 6. | பெருமாள் கோவிலை சுற்றியுள்ள பகுதிகள் | 4 ஊழியர்கள் |
| 7. | TPK ரோடு | 2 ஊழியர்கள் |
| 8. | பாரதியார் வணிக வளாகம் | 4 ஊழியர்கள் |
| 9. | மேலவெளிவீதி ரயில்நிலையம் வரை | 6 ஊழியர்கள் |
| 10. | பெரியார் பேருந்து நிலையம் | 8 ஊழியர்கள் |
| 11. | மேலமாரட் வீதி | 2 ஊழியர்கள் |

மொத்தம் **50** ஒப்பந்த துப்புரவு ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு உத்தேச செலவினம் **ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து இலட்சம்** )ஆகும். மேற்கண்ட பணியினை ஆறுமாத காலத்திற்கு பணி செய்ய அனுமதிக்கலாம்.

**மாமன்றத்தீர்மானம் எண்.476**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) CW1/27731/2013**

சுவீடன் நாட்டு தூதரக கடிதம் நாள் **09.07.2013–**ல் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுழற்சி, நீர் ஆதாரம், சுத்திகரிப்பு மற்றும் பகுந்தளித்தல் நவீனமான முறையில் சுத்தம் செய்தல், சுற்றுச்சூழல், பாதுகாப்பு, இயற்கை பேரிடர் மற்றும் நகர உள் கட்டமைப்பு போன்றவற்றை அறிந்து வர வணக்கத்திற்குரிய மேயர் அவர்களையும், ஆணையாளர் அவர்களையும் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கு வர அழைப்பு விடுத்ததின் பேரில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும், ஆணையாளர் அவர்களும் 25.09.2013 முதல் 01.10.2013 வரை மேற்கண்ட நாடுகளுக்கு சென்று வர அரசின் ஒப்புதலுக்கு கடிதம் அனுப்பியதற்கும், மேற்படி நாடுகளுக்கு சென்று வர ரூ.4.75லட்சம் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.477**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் :04.09.2013**

# மதுரை மாநகராட்சி
## மாமன்றக் கூட்டம்
# Table Agenda - நாள் : 04.09.2013

**10)மநி 1/16466/2013**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு வெளியிடப்பட்ட பணிவிதிகள் குறித்த அரசாணை எண் 237 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26–09–1997 மற்றும் அதனைத்தொடர்ந்து வரப்பெற்ற அரசாணை எண்.179/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.05.10.2009-ல் அமைச்சுப்பணியாளர்களின் II ம் நிலை பணியிடங்களான நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களை III ம் நிலை பணியிடங்களான கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை முற்றிலும் பணிமூப்பின் அடிப்படையில் நிரப்ப கீழ்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Administrative Officer / Accounts Officer** | i) By promotion from the holders the post of superintendent of the corporation General Subordinate Service. (or)<br>ii) By Transfer from the holder of the posts in class II. | **Must have worked for a period of not less than two years in the Post of Superintendent or AssistantRevenue Officer** |

மேலும் மதுரை மாநகராட்சிக்கென பணியிடங்கள் நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண் 139/ நகராட்சி நிர்வாகம். மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 27–05–1997 மற்றும் அரசாணை எண் 76/ நகராட்சி நிர்வாகம். மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 12–5–1998 களின்படி நிர்வாக அலுவலர்–4 பணியிடங்களும், கணக்கு அலுவலர்–3 பணியிடங்களும், மேலும் அரசாணை(2டி) எண் : 105/ நகராட்சி நிர்வாகம். மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2 )துறை நாள் : 26–06–2007ன்படி JNNURM திட்டப்பணிக்காக ஒரு (1) கணக்கு அலுவலர் பணியிடமும் தோற்றிவிக்கப்பட்டு கீழ்கண்ட விபரப்படி பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர்.

**நிர்வாக அலுவலர்:–**

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது பணிபுரிபவர் பெயர் | காலிப்பணியிடம் (பணி ஓய்வு பெற்ற பணியாளரின் பெயர் மற்றும்பணிஓய்வு நாள்) |
|---|---|---|---|
| **Zone-1** | 1 | – | திரு.R.J.A.ரவீந்திரன்,நி.அ., 31.05.2013-ல் பணிஓய்வு |
| **Zone-2** | 1 | – | திருமதி.V.சுமதி., நி.அ., 30.06.2013-ல் பணிஓய்வு |
| **Zone-3** | 1 | – | திருமதி.V.அங்கயர்கண்ணி., நி.அ., 31.10.2012-ல் பணிஓய்வு |
| **Zone-4** | 1 | – | திரு.M.சுந்தரமூர்த்தி,நி.அ., 30.06.2012-ல் பணிஓய்வு |

**கணக்கு அலுவலர்:–**

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது பணிபுரிபவர் விபரம் | காலிப்பணியிடம் (பணி ஓய்வு பெற்ற பணியாளரின் பெயர் மற்றும்பணிஓய்வு நாள்) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| பொது | 1 | திரு. M.முருகேசன்., க.அ. பணிபுரிந்து வருகிறார் | – |

| | | | |
|---|---|---|---|
| கு& வ. | 1 | – | திரு.G.நாராயணன்., க.அ., 30.06.2012-ல் பணிஓய்வு |
| ஓ&க | 1 | – | திரு.P.S.மணி க.அ. பணி இறக்கம்செய்யப்படுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் |
| JNNURM | 1 | திருமதி.R.S. சாந்திமாய்., க.அ. பணிபுரிந்து வருகிறார். | – |

மேற்கண்ட 8 பணியிடங்களில் தற்போது பணிபுரியும் திருமதி.ஆர்.எஸ். சாந்திமாய் மற்றும் திரு. எம்.முருகேசன், இரண்டு கணக்கு அலுவலர்களை தவிர தற்போது கணக்கு அலுவலராக பணிபுரியும் திரு.பி.எஸ்.மணி, கணக்கு அலுவலரை கோப்பு எண் மநி1/11409/2012 நாள் : 17–06–2013 ன்படி பணியிறக்கம் செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள ஒரு கணக்கு அலுவலர் காலிப்பணியிடத்திற்கும், 2013-14ம் ஆண்டில் பணிஓய்வினால் ஏற்பட்டுள்ள கணக்கு அலுவலர் காலிப்பணியிடத்திற்கும், மேலும் 2013–14ம் ஆண்டில் பணிஓய்வினால் ஏற்பட்டுள்ள நிர்வாக அலுவலர்கள் நான்கு (4) காலிப்பணியிடங்களுக்கும், (மேற்கண்ட விபரப்படி தற்போது காலியாகவுள்ள 2–கணக்கு அலுவலர்கள், மற்றும் 4–நிர்வாக அலுவலர்கள் ஆக மொத்தம் 6 பணியிடங்களை) பணிவிதிகளின்படி 10க்கு 1 என்ற விகிதாச்சார அடிப்படையில் 1 காத்திருப்போர் பணியிடம் உட்பட 7 கணக்கு/நிர்வாக அலுவலர் பணியிடங்களுக்கு 2013–14ம் ஆண்டு வெளியிடப்பட்ட பணிமுதிர்ச்சி பட்டியலின்படி முற்றிலும் பணிமூப்பின் அடிப்படையில் மேற்கண்ட தகுதிகள் பூர்த்தியடைந்த கீழ்கண்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர்களை தேர்வு செய்து ரு. 6500–200–10500 என்ற ஊதியத்திற்கு இணையான VI – வது ஊதியக்குழு பரிந்துரையின்படி கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலருக்கான ஊதியம் நிர்ணயம் செய்து அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிஉயர்வு வழங்க பணி உயர்வு பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

| வரிசை எண். | பணிஉயர்வு பெறஉள்ளவர் விபரம் | இரண்டு ஆண்டுகள் கண்காணிப்பாளர் / உ.வ.அ. பணியிடத்தில் பணிபுரிந்த விபரம் |
|---|---|---|
| 1. | திரு.வி.பாலசுப்பிரமணியன், கண்காணிப்பாளர் | 02.11.2009 முதல் 01.11.2011 வரை |
| 2. | திருமதி.K. வசந்தா கண்காணிப்பாளர் | 28.01.2010 முதல் 27.01.2012 வரை |
| 3. | திரு.B. சுரேஷ்குமார், உதவி வருவாய் அலுவலர் | 01.11.2010 முதல் 03.10.2012 வரை |
| 4. | திரு.N.பழனிவேல்., உதவி வருவாய் அலுவலர்., | 25.02.2011 முதல் 24.02.2013 வரை |
| 5. | திரு.A. ரெங்கராஜன், உதவி வருவாய் அலுவலர் | 12.03.2010 முதல் 11.03.2012 வரை |
| 6. | திரு.S.சரவணன், உதவி வருவாய் அலுவலர் | 23.02.2011 முதல் 22.02.2013 வரை |
| 7. | திருமதி.G. கிளாரா, கண்காணிப்பாளர் | 23.02.2011 முதல் 22.02.2013 வரை |
| 8. | திரு.S.சண்முகநாதன் கண்காணிப்பாளர் | 23.02.2011 முதல் 22.02.2013 வரை |
| 9. | திரு.P.ராஜகோபால், கண்காணிப்பாளர் | 17-05-2011 முதல் 16.05.2013 வரை |

எனவே, மேற்கண்டவாறு காலியாக உள்ள மொத்த நான்கு நிர்வாக அலுவலர்கள் மற்றும் இரண்டு கணக்கு அலுவலர்கள் ஆகிய 6 பணியிடங்களுக்கு மேற்கண்டவாறு கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்கள் பணியிடங்களில் பணிபுரிந்தவர்களை பணி உயர்வு வழங்கியதை அரசின் உறுதியாக்கம் பெற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி பூர்த்தி செய்யலாம்.

**குறிப்பு:–**

1) பணிவிதிகளின்படி கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் இரண்டாம் நிலை பணியிடங்களாகும். இவை இரண்டும் ஒரே சம்பள விகிதத்தில் உள்ளன.
2) இந்த இரண்டு பணியிடங்களும் மாநகராட்சி பணியாளர்களிலிருந்து பணி உயர்வு மற்றும் பணி மாறுதல் மூலம் நிரப்பப்படும் பணியிடம் ஆகும்.
3) மாநகராட்சிப் பணிவிதிகள் திருத்தம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண். 179 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4)துறை நாள்: 05.10.2009-ன்படி கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் ஆகிய பணியிடத்தில் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் பணிபுரிந்திருக்கும் நபர்களை பதவி உயர்வின் மூலம் கணக்கு அலுவலர் / நிர்வாக அலவலர்களாக பதவி உயர்வு செய்ய வேண்டும் என்று உள்ளது.

4) மேற்கண்ட நபர்கள் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணிநிறைவு செய்துள்ளதால் உரிய பணி உயர்வு வழங்கப்பட வேண்டும்.
5) இம்மாநகராட்சிப் பணியாளர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும் தொடர்ந்த வழக்கு எண்.WP.No.375/2008, WP.No.486/2008, WP.No.5638/2008, WP.No.1994/2009, WP.No.2054/2009, WP.No.11437/2010, WP.No.27375/2010, M.P.S.R..No.78221to78223/2010, WP.(MD)No.7996/2010, WP.No.14919/2010, WP.No.4491/2012, ஆகிய வழக்குகளில் பிறப்பிக்கப்படும் நீதிமன்ற இறுதி ஆணைகளுக்குட்பட்டும், WP.No.10931/2010-க்கு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது.
6) அரசாணை எண். 24 (முப்பதாண்டு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.08.2010 அரசாணைக்கு உரிய தெளிவுரை கோரப்பட்டுள்ளது. அரசின் தெளிவுரைக்குட்பட்டு பணிஉயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
7) கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பட்டியலில் வரிசை எண். 7-ல் உள்ள திருமதி.G.கிளாரா மீது குற்றச்சாட்டு விதி எண்.8(2)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், பணிஉயர்வு பட்டியலில் சேர்க்கப்படவில்லை.
8) கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பட்டியலில் வரிசை எண். 6-ல் உள்ள திரு. எஸ்.சரவணன் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தன்விருப்பத்தின் அடிப்படையில் தற்காலிகமாக முன்றாண்டுகளுக்கு பதவி உயர்வு தேவையில்லை என தெரிவித்துள்ளதால் பணிஉயர்வு பட்டியலில் சேர்க்கப்படவில்லை.
9) காத்திருப்போர் பட்டியலின் வரிசை எண்9ல் திரு.பி.ராஜகோபால் , கண்காணிப்பாளர் வைக்கப்பட்டுள்ளார்.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.478**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

**11)<u>ம.நி.1/11409/2012</u>**

மதுரை மாநகராட்சி பொது பணிவிதிகள் 1996-ன்படி அமைச்சு பணியாளர்களுக்கான III-ம் நிலை பணியிடமான உதவியாளர் காலிப் பணியிடத்திற்கு பணியாளர் நியமனத்தின் போது 1:9 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பணிநியமனம் செய்ய வேண்டுமென்பது விதியாகும்.

அதனடிப்படையில் உதவியாளர் காலிப்பணியிடத்தில் 08.06.2000-ல் நேரடி நியமனம் செய்யப்பட்ட திரு.P.S.மணியை நி.ம.கு.தீ. எண்.77/2006, நாள்.28.02.2006-ன் படி அன்னாரின் பணி நியமன தேதியான 08.06.2000 முற்பகல் முதல் பணி ஒழுங்குபடுத்தியும், 07.06.2002 முதல் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அன்னார் 08.06.2000-த்தில் பணிநியமனம் செய்யப்பட்டிருப்பினும் அன்னாரை பணிநியமனம் கோரி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் இம்மாநகராட்சியில் பட்டியல் வரப்பெற்ற நாளான27.10.1998-ன் படி அன்னாருக்கு முன்னுரிமை வழங்க நி.ம.கு.தீ.எண்.22/2007 நாள்.13.12.2007-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு நி.ம.கு.தீ.எண்.23/2007 நாள்.13.12.2007-ன்படி பணிமுதிர்ச்சி பட்டியலில் வ.எண்.15-ல் திரு.G.சூரியநாராயணனுக்கு பின்னவராகவும், திரு.R.விவேகானந்தனுக்கு முன்னவராகவும் முன்னுரிமை வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பல்வேறு பணிஉயர்வுகள் வழங்கப்பட்டு தற்போது கணக்கு அலுவலர் (ஓ&க) ஆக பணிபுரிந்து வருகிறார்.

திரு.P.S.மணி நேரடி உதவியாளர் நியமனத்தை ஆட்சேபித்து மாநகராட்சி பணியாளர்களால் W.P.(MD) No.375/2008, 486/2008, 5638/2008-ன்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு தற்போது மேற்படி வழக்குகள் தொடரப்பட்டுள்ளது.

அன்னாரின் பணிநியமன தேதியான 08.06.2000-ஐ அடிப்படையாக கொண்டு மேற்கண்டவாறு வரன்முறை/தகுதிகாண்பருவம் முடித்து அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பணி முன்னுரிமை நாளினை 08.06.2000 என நிர்ணயம் செய்வதற்கு பதிலாக அன்னாரை பணிநியமனம் செய்யப்படாத நாளிலிருந்து அதாவது வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்ட நாளான 27.10.1998-ம் தேதியிலிருந்து பணி முன்னுரிமை நாளாக நிர்ணயம் செய்து அதனடிப்படையில் பணிஉயர்வு வழங்கப்பட்ட நிகழ்வானது சட்டப்படி தவறு என்பதால், மாநகராட்சி நிலை வழக்கறிஞர் அவர்களது கருத்துருவின்படியும், தவறு என தெரியவருவதாலும், மறுபரிசீலணை செய்து ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட நி.ம.கு.தீ.எண்.22/2008 மற்றும் 23/2008 நாள்:13.12.2007-ஐ கோப்பு எண்.மநி1/11409/2012-ல் திருத்தம் செய்து 13.05.2013-ம் தேதிய ஆணையாளர் அவர்களது ஒப்புதலுக்குட்பட்டு திரு.P.S.மணி உதவியாளரை திரு.ராஜாராம் தகுதி உயர்வு உதவியாளருக்கு பின்னவராக அன்னாரை நிர்ணயம் செய்து தற்போது கணக்கராக பணியிறக்கம் செய்துள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களது குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.479**</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மதுரை மேயர்
நாள் :04.09.2013 மதுரை மாநகராட்சி

நாள் : 04.09.2013

## தீர்மானம்.1

நாட்டின் விடுதலைக்காக தன் இன் உயிரை பற்றி கவலைப்படாமல் உழைத்த சுதந்திர போரட்ட வீரர்களை கௌரப்படுத்தும் வகையில், தற்போது வழங்கப்பட்டு வரும் 7000 ரூபாய் ஒய்வூதியத்தை 9000 ரூபாயாக உயர்த்தியும், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஒய்வூதியம் 3500 ரூபாயிலிருந்து 4500 ரூபாயாக உயர்த்தி, தொடர்ந்து சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பல்வேறு நன்மைகளை வாரி வழங்கி அவர்களை கவுரவப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக் கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.480</u>

மேயர்

நாள் : **04.09.2013**

## தீர்மானம்.2

சர்வதேச அளவில் தமிழகத்தின் சட்டத்துறைக்கு பெருமை சேர்க்கும் வண்ணமும், தமிழகம் சட்டதுறையின் முதன்மையாக சிறந்து விளங்கும் வண்ணமும், திருச்சி ஸ்ரீரங்கத்தில் உள்ள நவலூர் குட்டப்பட்டுவில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.100 கோடி செலவில் தமிழ்நாடு தேசிய சட்ட பள்ளியை தனது பொற்கரங்களால் வீடியோ காணொலிகாட்சி மூலம் திறந்து வைத்து, இதன்மூலம் தமிழகத்திற்கு பெருமை சேர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.481**

**மேயர்**

**நாள் : 04.09.2013**

**தீர்மானம்.3**

தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழ்நாடே என் குடும்பம், என்று தமிழ்நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலுள்ள 28 மாநிலங்களில் இல்லாத வகையில் பொது விநியோக திட்டத்தின் கீழ் 1 கோடியே 85 லட்சம் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசியை மக்களுக்கு வாரி வழங்கி, இதன்மூலம் தமிழகத்தின் எந்த மூலையிலும் பசி, பட்டினி என்ற சொல் அறவே இருக்க கூடாது என்று எண்ணி, தமிழக மக்களுக்கு முழு உணவு பாதுகாப்பினை வழங்கி வரும் வேளையில், அதற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மத்திய தேசிய உணவுபாதுகாப்பு மசோதா என்ற பெயரில் தமிழ்நாட்டின் உரிமைகளையும், தமிழ்நாட்டிற்கு நிதிச்சுமை ஏற்படக்கூடிய வகையில் திட்டங்களை கொண்டு வந்த போது, அதை ஒட்டுமொத்த தமிழினத்தின் காவல்தெய்வமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடுமையாக குரல் கொடுத்து உணவு பாதுகாப்பு மசோதாவில் திருத்தம் தேவை என்று கடுமையாக போர்க்குரல் எழுப்பியும், திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வரவில்லை. தமிழக மக்களுக்கு எதிராக அமைந்துள்ள இந்த மசோதாவை கருணாநிதி தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து நாடாளுமன்றத்தில் ஆதரவு தெரிவித்து, தமிழகத்திற்கு மிகப்பெரிய துரோகத்தை செய்தது மட்டுமல்லாமல் தன் குடும்ப அரசியல் பிழைப்பிற்காக இந்த மசோதாவை கொண்டு வந்த காங்கிரஸ் தலைவரை மணிமேகலை என்று துதிபாடிய ஒட்டுமொத்த தமிழ் இன துரோகியின் அடையாளமாக விளங்கும் இரட்டை வேசம் போடும் இரட்டை நாக்கு உள்ள சுயநலவாதி கருணாநிதியை இம்மாமன்றக் கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.482**</u>

**மேயர்**